**செப்டம்பர் – 09**

# TNPSC துளிகள்


- இத்தாலியில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான 19வது சர்வதேச புவி அறிவியல் ஒலிம்பியாட் (IESO) போட்டியில் இந்தியா சாதனை அளவாக 9 பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளது.
    - 39 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்களிடையே இந்திய அணி 4 தங்கம், 3 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரி, தேசிய பேரிடர் மீட்புப் படையின் (NDRF) மாதிரியில் அமைக்கப்பட்ட 200 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புப் பேரிடர் மீட்புக் குழுவான 'அர்ஜுன் வாகினி' என்ற அமைப்பை 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 அன்று தொடங்கினார்.
- ஏர் வைஸ் மார்ஷல்/வான்படைத் துணைத் தலைவர் சக்தி சர்மா, இந்திய ஆயுதப் படைகளின் மருத்துவமல்லாத பிரிவில் இருந்து ஏர் வைஸ் மார்ஷல் அல்லது அதற்கு இணையான பதவியை எட்டிய முதல் பெண் அதிகாரி என்ற பெருமையை 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 அன்று பெற்றார்.
    - 1994 ஆம் ஆண்டில் இந்திய விமானப் படையின் கல்விப் பிரிவில் இணைந்த இவர், விமானப் படைத் தலைமையகத்தின் உதவித் தலைவராக (கல்வி) பொறுப்பேற்றார். மேலும் கபூர்தலாவில் உள்ள சைனிக் பள்ளியின் முதல்வராகப் பணியாற்றி, சைனிக் பள்ளியை வழிநடத்திய முதல் பெண் முப்படை அதிகாரியாவார்.
- இந்தோனேசியாவில் உள்ள அனக் கரக்கடோவா எரிமலை வெடித்ததால், சுமார் 3,000 விமானங்கள் ரத்து செய்யப்பட்டு 3,40,000-க்கும் மேற்பட்ட பயணிகள் பாதிக்கப் பட்டனர்.
    - "கரக்கடோவாவின் குழந்தை" என்று பொருள்படும் அனக் கரக்கடோவா, ஜாவா மற்றும் சுமத்ராவுக்கு இடையில் உள்ள சுண்டா நீரிச்சந்தியில், ஜகார்த்தாவில் இருந்து சுமார் 150 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது; இது 1883 ஆம் ஆண்டில் கரக்கடோவா எரிமலை வெடித்த பிறகு உருவான கடலடிப் பள்ளத்திலிருந்து எழுந்தது.
- தன்னார்வத் தொண்டு மற்றும் தொண்டு நடவடிக்கைகளின் மூலம் மற்றவர்களுக்கு உதவ மக்கள், அரசு சாரா நிறுவனங்கள் (NGOs) மற்றும் பிற அமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 அன்று சர்வதேச தொண்டு தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027

- 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் மக்கள் தொகை எண்ணும் கட்டமானது தேர்தல் நடைபெறவுள்ள நான்கு மாநிலங்களில் முன்வைக்கப்பட்டுள்ளது, அதே வேளையில் மணிப்பூரில் இந்த நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட் மற்றும் கோவா ஆகிய மாநிலங்களில் 2026 ஆம் ஆண்டு நவம்பர் 16 முதல் 2027 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் தேதி வரை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து ஜனவரி 5–9 ஆம் தேதி வரை மறுபரிசீலனைச் சுற்று நடைபெறும்.

- இரண்டாம் கட்டத்தில், சாதிப் பிரிவு உட்பட 40 கேள்விகள் இடம்பெறும்; 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் ஒப்பிடும்போது குறைந்தது 13 கேள்விகள் புதியவை.
- புதிய கேள்விகளில் குடியுரிமை, பெற்றோரின் விவரங்கள், வாழ்க்கைத் துணைவரின் பெயர், டிஜிட்டல் எழுத்தறிவு, நிரந்தர முகவரி, கோவிட்-19 தடுப்பூசி, வங்கிக் கணக்குகள், கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம், அலைபேசி, ஆதார் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை அடங்கும்.
- டிசம்பர் 1 அன்று வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணி தொடங்குவதற்கு முன், 2026 ஆம் ஆண்டு நவம்பர் 16–30 ஆம் தேதி வரை சுய கணக்கெடுப்பு வசதி கிடைக்கப் பெறும்; இந்த நான்கு மாநிலங்களுக்கான குறிப்புத் தேதி 2027 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் தேதி ஆகும்.
- மணிப்பூரில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் மறு அறிவிப்பு வரும் வரை ஒத்தி வைக்கப் பட்டுள்ளன; செப்டம்பர் 1–30 ஆம் தேதி வரை திட்டமிடப்பட்டிருந்த அதன் முதற்கட்டம், போராட்டங்கள் மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) கோரிக்கைகளுக்குப் பிறகு நிறுத்தப் பட்டது.




# சர்வதேசச் செய்திகள்


## கார்க் தீவு எண்ணெய் டேங்கர்/கலன் தாக்குதல்

- ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (IRGC) இரண்டு அமெரிக்க கடற்படை கப்பல்கள் மீது உந்துவிசை எறிகணைகளை ஏவியதைத் தொடர்ந்து, 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 அன்று கார்க் தீவு அருகே ஒன்று உட்பட மூன்று ஈரானிய எண்ணெய் டேங்கர்கள் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தின.
- கார்க் தீவு ஈரானின் புஷெர் மாகாணத்தில் உள்ள பாரசீக வளைகுடாவில், புஷெர் துறைமுகத்திற்கு வடமேற்கே சுமார் 30 மைல் தொலைவில் அமைந்துள்ளது.
- இது ஈரானின் மிகப்பெரிய கச்சா எண்ணெய் ஏற்றுமதி முனையமாகும், நாட்டின் பெரும்பான்மையான கச்சா எண்ணெய் ஏற்றுமதி இத்தீவு வழியாகவே நடைபெறுகிறது.
- ஹார்முஸ் நீர்ச்சந்தி மற்றும் பிற அமெரிக்க தொடர்புடைய கப்பல்களில் உள்ள மூன்று டேங்கர்களையும் தங்கள் படைகள் இலக்கு வைத்துள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

- இந்தத் தாக்குதல்கள், முக்கிய உலகளாவிய எரிசக்தி பாதையான ஹார்முஸ் நீர்ச்சந்தி வழியிலான எண்ணெய் விநியோகம் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த கவலைகளை அதிகரித்துள்ளன.




## வோஸ்டோக் எண்ணெய் குழாய் திட்டம்





- ரஷ்யா, வோஸ்டோக் எண்ணெய் பிரதான குழாய் வழியாக முதல் எண்ணெய் விநியோகத்தைத் தொடங்கியது.
- இந்தக் குழாய் கச்சா எண்ணெயை ரஷ்யாவின் கிராஸ்னோயார்ஸ்க் பிரதேசத்தில் உள்ள செவர் பே (புக்தா செவர்) முனையத்திற்கு கொண்டு செல்கிறது.
- வோஸ்டோக் ஆயில் என்பது ரோஸ்நெப்ட் தலைமையிலான ஒரு முக்கிய ஆர்க்டிக் எண்ணெய் திட்டமாகும்.
- இத்திட்டம் சுமார் 7 பில்லியன் டன் திரவ ஹைட்ரோகார்பன்களைக் கொண்ட மதிப்பிடப் பட்ட வளத் தளத்தைக் கொண்டுள்ளது.

- இந்தக் குழாய் அமைப்பு வான்கோர் மற்றும் பயாக்கா எண்ணெய் வயல்களை கடலோர ஏற்றுமதி முனையத்துடன் இணைக்கிறது.
- இத்திட்டம் ரஷ்யாவின் வடக்கு கடல் பாதை வழியாக எண்ணெய் போக்குவரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## நேரடி வரி நெகிழ்வுத்தன்மை

- இந்தியாவின் நேரடி வரி நெகிழ்வுத் தன்மையானது தொடர்ந்து மூன்றாவது நிதியாண்டாக 1-க்கு மேல் உயர்ந்து, 2024–25 ஆம் ஆண்டில் 1.39 ஐ எட்டியுள்ளது.
- நேரடி வரி நெகிழ்வுத்தன்மை என்பது நேரடி வரி வருவாய் வளர்ச்சியை, பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியுடன் ஒப்பிடுகிறது.
- இந்த விகிதம் 2022–23 ஆம் ஆண்டில் 1.27 ஆகவும், 2023–24 ஆம் ஆண்டில் 1.48 ஆகவும், 2024–25 ஆம் ஆண்டில் 1.39 ஆகவும் இருந்தது.
- 1-க்கு மேல் உள்ள நெகிழ்வுத்தன்மை மதிப்பு, பெயரளவு ஜிடிபியை விட நேரடி வரி வருவாய் வேகமாக வளர்ந்துள்ளது என்பதைக் குறிக்கிறது.
- நேரடி வரிகளில் வருமான வரி, நிறுவன வரி மற்றும் பங்குகள் பரிவர்த்தனை வரி ஆகியவை அடங்கும், இவை மத்திய நேரடி வரிகள் வாரியத்தால் (CBDT) நிர்வகிக்கப் படுகின்றன.
- 2025 ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டம், 1961 ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்திற்குப் பதிலாக 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வந்தது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வெறிநாய்க் கடி நோய் ஒழிப்பு - பூடான்

- பொது சுகாதாரப் பிரச்சனையாக நாய் மூலம் பரவும் வெறிநாய்க் கடி நோயை (Rabies) ஒழித்த உலக சுகாதார அமைப்பின் (WHO) தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் உள்ள முதல் நாடு என்ற பெருமையை பூடான் பெற்றுள்ளது.
- வெறிநாய்க் கடி நோய் என்பது மத்திய நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் ஒரு வைரஸ் நோயாகும், மேலும் நோய் அறிகுறிகள் தோன்றிவிட்டால் இது உயிரிழப்பையும் ஏற்படுத்துகிறது.

- இது முக்கியமாக பாதிக்கப்பட்ட விலங்குகளின் உமிழ்நீர் மூலம், குறிப்பாக கடிப்பதால் பரவுகிறது.
- உலகளவில் மனித வெறிநாய்க் கடி நோய் இறப்புகளில் சுமார் 99% நாய்களால் ஏற்படுகின்றன.
- உலகளவில், வெறிநாய்க் கடி நோய் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 59,000 மனித இறப்புகளை ஏற்படுத்துகிறது, இதில் மூன்றில் ஒரு பங்கு இந்தியாவில் நிகழ்கிறது.
- தேசிய வெறிநாய்க் கடி நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் 2030 ஆம் ஆண்டிற்குள் மனித வெறிநாய்க் கடி நோய் இறப்புகளை பூஜ்ஜியமாகக் கொண்டுவர இந்தியா இலக்கு வைத்துள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பீட் நில தீ விபத்துகள் - இந்தோனேசியா

- கடுமையான வறட்சி மற்றும் எல் நினோ வலுவடைந்து வருவதன் காரணமாக இந்தோனேசியாவின் பீட் நில தீ விபத்துகள் 2026 ஆம் ஆண்டில் தீவிரமடைந்து வருகின்றன, நிலத்தடி தீ கடுமையான மாசுபாட்டை உருவாக்குகிறது.
- பீட் நிலத் தீ உலர் சதுப்பு நில மண்ணில் நிலத்தடியில் மெதுவாக எரிகிறது மற்றும் இது பல மாதங்கள் நீடிக்கும், இதனால் அவற்றை அணைப்பது கடினம்.
- இந்தோனேசியாவில் உலகின் வெப்பமண்டல பீட் நிலங்களில் சுமார் 36% உள்ளது, முக்கியமாக கலிமந்தன், சுமத்ரா மற்றும் பப்புவாவில் உள்ளது.
- பீட் நிலத் தீ மற்ற வெப்பமண்டல காடுகளின் தீயை விட 3 மடங்கு அதிக நுண் துகள்களையும், 2 மடங்கு அதிக மீத்தேன் மற்றும் கார்பன் மோனாக்ஸைடையும் உருவாக்கும்.
- தீ விபத்துகளைக் கண்காணிக்க MODIS (மிதமான தெளிவுத்திறன் கொண்ட படமாக்கும் ஸ்பெக்ட்ரோரேடியோமீட்டர்) மற்றும் VIIRS (காணக்கூடிய மற்றும் அகச் சிவப்பு கதிர்வீச்சு படமாக்கும் ரேடியோமீட்டர் தொகுதி) செயற்கைக்கோள்கள் பயன்படுத்தப் படுகின்றன; இருப்பினும், அடர்த்தியான புகை மிகக் கடுமையான தீ விபத்துகளை மறைத்து விடக் கூடும்.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் தொடக்கத்தில் இந்தோனேசியாவின் சுமார் 90% பகுதிகளில்

மிகக் குறைந்த மழையோ அல்லது மழையோ பெய்யவில்லை, அதே நேரத்தில் சிபோங்கி (SiPongi) அமைப்பு ஆகஸ்ட் 31 அன்று 946 தீப் புள்ளிகளைப் பதிவு செய்து உள்ளது.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### CVC ஆண்டறிக்கை 2025


- ஊழல் கண்காணிப்பு அமைப்பு ஆணையம் (CVC) தனது 2025 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை வெளியிட்டது, இதில் மத்திய புலனாய்வு அமைப்பு (CBI) விசாரித்த 7,200க்கும் மேற்பட்ட ஊழல் வழக்குகள் விசாரணை நிலுவையில் உள்ளதாக சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.
- மத்திய ஊழல் கண்காணிப்பு அமைப்பு ஆணையச் சட்டம், 2003-இன் பிரிவு 14 இன் கீழ் இந்த அறிக்கை CVC-ஆல் தயாரிக்கப்பட்டு இந்தியக் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப் படுகிறது.
- குடியரசுத் தலைவர் இந்த அறிக்கையை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமர்ப்பிக்க ஏற்பாடுகளைச் செயல்படுத்துவார்.
- CVC அமைப்பானது, மத்திய ஊழல் கண்காணிப்பு அமைப்பு ஆணையச் சட்டம், 2003-இன் கீழ் இயங்குகிறது, இது அதற்கு சட்டப்பூர்வ அந்தஸ்தை வழங்குகிறது மற்றும் அதன் அதிகாரங்கள் மற்றும் பணிகளை வரையறுக்கிறது.
- ஊழல் தடுப்புச் சட்டம், 1988-இன் கீழ் வரும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் CBI மீது CVC கண்காணிப்பு அதிகாரம் செலுத்துகிறது.
- சந்தானம் குழுவின் பரிந்துரையின் பேரில் 1964 ஆம் ஆண்டில் CVC நிறுவப்பட்டது மற்றும் 2003 ஆம் ஆண்டில் சட்டப்பூர்வ அமைப்பாக மாறியது.
- CBI தண்டனை விகிதம் 2024 ஆம் ஆண்டில் 69.14% இலிருந்து 2025 ஆம் ஆண்டில் 71.71% ஆக உயர்ந்துள்ளது.
- CBI-இல் அனுமதிக்கப்பட்ட 7,300 பணியிடங்களில் 1,088 காலிப் பணியிடங்கள் இருந்தன.

- ஊழல் தடுப்புச் சட்டம், 1988-இன் பிரிவு 17A, அரசு ஊழியர்களின் சில அதிகாரப்பூர்வ முடிவுகள் அல்லது பரிந்துரைகளை விசாரிப்பதற்கு முன் முன்அனுமதி பெற வேண்டும் என்று கட்டாயமாக்குகிறது.




# மாநிலச் செய்திகள்

## லக்குண்டி மறைக்கப்பட்ட நினைவிடங்கள் – கர்நாடகா




- கர்நாடக மாநிலம் கதக் மாவட்டத்தில் உள்ள லக்குண்டியில் மறைந்துள்ள நினைவிடங்களைக் கண்டறிய தொழில்நுட்ப அடிப்படையிலான ஆய்வு மேற் கொள்ளப் படவுள்ளது.
- தொல்லியல், அருங்காட்சியகங்கள் மற்றும் பாரம்பரியத் துறை (DAMH), பெங்களூருவில் உள்ள உயரிட ஆய்வுகளுக்கான தேசிய நிறுவனத்துடன் (NIAS) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- தொழில்நுட்பங்களில் ஒளி கண்டறிதல் மற்றும் தூரம் அளவிடுதல் (LiDAR), புவியியல் தகவல் அமைப்பு (GIS), தொலை உணர்வு மற்றும் தரை ஊடுருவும் ரேடார் (GPR)


ஆகியவை அடங்கும்.

- ❖ தாவரங்களின் கீழ் மறைந்துள்ள அமைப்புகளைக் கண்டறிய ஆளில்லா விமான ஆய்வுகள் மற்றும் புகைப்பட அளவீடுகளும் பயன்படுத்தப்படும்.
- ❖ கல்யாண சாளுக்கியர்களின் கீழ் 10 முதல் 12 ஆம் நூற்றாண்டுகளில் லக்குண்டி ஒரு முக்கிய நகர மையமாக இருந்தது.
- ❖ இதன் கோயில்கள் நகரா, திராவிட மற்றும் பூமிஜா கட்டடக் கலை பாணிகளை இணைக்கும் வேசரா பாணியைக் காட்டுகின்றன.
- ❖ லக்குண்டியை யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தற்காலிகப் பட்டியலில் முன்மொழிய கர்நாடகா விரிவான திட்ட அறிக்கையை (DPR) தயாரித்து வருகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இக் (Ig) நோபல் பரிசு 2026

- ❖ 36வது இக் நோபல் பரிசு வழங்கும் விழா 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 அன்று சுவிட்சர்லாந்தின் சூரிச்சில் நடைபெற்றது, இது விசித்திரமான அறிவியல் ஆராய்ச்சிகளை அங்கீகரித்தது.
- ❖ "மக்களைச் சிரிக்க வைத்து, பின்னர் சிந்திக்க வைக்கும்" ஆராய்ச்சிகளுக்காக இம்ப்ராபபிள் ரிசர்ச் இதழால் இந்த விருதுகள் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப் படுகின்றன.
- ❖ கரப்பான் பூச்சி பாலிலிருந்து பெறப்படும் ஆற்றல் மிகுந்த புரதப் படிகங்களைப் படித்ததற்காக வேதியியல் பரிசை வென்ற குழுவில் பெங்களூரு இன்ஸ்டெம் (inStem) நிறுவனத்தைச் சேர்ந்த இந்திய ஆராய்ச்சியாளர்கள் இடம் பெற்றிருந்தனர்.
- ❖ கொசுவின் வாய் பாகங்களை மிக நுட்பமான 3D-அச்சிடும் முனைகளாகப் பயன்படுத்தும் ஆராய்ச்சியைத் தொழில்நுட்பப் பரிசு அங்கீகரித்தது.
- ❖ மண் ஆரோக்கியத்தைப் படிப்பதற்காக 25-க்கும் மேற்பட்ட நாடுகளில் பருத்தி உள்ளாடைகளைப் புதைத்த ஆராய்ச்சியாளர்களை மண் அறிவியல் பரிசு அங்கீகரித்தது.





# முக்கிய தினங்கள்

## தேசிய ஆசிரியர்கள் தினம் 2026 – செப்டம்பர் 5

- ❖ டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் இந்தியா

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 அன்று ஆசிரியர்கள் தினத்தைக் கொண்டாடுகிறது.

- டாக்டர் ராதாகிருஷ்ணன் 1888 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 அன்று தமிழ்நாட்டின் திருத்தணியில் பிறந்தார் என்பதோடு இவர் ஒரு தத்துவஞானி, அறிஞர் மற்றும் கல்வியாளர் ஆவார்.
- இவர் இந்தியாவின் முதல் துணைக் குடியரசுத் தலைவராகவும் (1952–1962) இரண்டாவது குடியரசுத் தலைவராகவும் (1962–1967) பணியாற்றினார்.
- துணைக் குடியரசுத் தலைவராவதற்கு முன்பு சோவியத் யூனியனுக்கான இந்தியத் தூதராகப் (1949–1952) பணியாற்றினார்.
- இவர் 1954 ஆம் ஆண்டில் பாரத ரத்னா விருதைப் பெற்றார், மேலும் 1963 ஆம் ஆண்டில் ஐக்கிய பேரரசால் ஆர்டர் ஆஃப் மெரிட் விருதும் வழங்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★